**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,** சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் நாள் சனிக்கிழமை

**இ.ம.எண்.5/2025**

IN

**அசல் வழக்கு எண்.343/2015**

செல்வராஜ் ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. அன்னத்தாய்
2. ராமாத்தாள்
3. மகாராஜன்
4. சீனிப்பாண்டி (எ) சீனிவாசன்
5. அன்னராஜ்
6. வள்ளித்தாய்
7. கனித்தாய் (எ) கனியம்மாள் ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 24.07.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.கிளாஸ்டின் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 7 ம் எதிர்மனுதாரர்/7 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் மற்றும் 7 ம் எதிர்மனுதாரரின் வாத உரையை கேட்டறிந்தும், மனு, எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.02 17:01:47 +0530

**<u>உத்தரவு</u>**

மனுதாரரால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151–ன் கீழ் இவ்வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் கூடுதல் சாட்சியை விசாரணை செய்வதற்காக வேண்டி அசல் வழக்கை மறுதிறவு செய்து உத்தரவிடக் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–</u>**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பிராது தபசில் சொத்தில் இரண்டில் ஒரு பங்கு பாகத்தை நயமிதம் பார்த்து, தரம் பார்த்து பிரித்து பிரிந்த பாகத்தை மனுதாரர் வசம் தனித்து சுவாதீனம் கொடுக்க கோரி மேற்படி அசல் வழக்கை எதிர்மனுதாரருக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் மேற்படி அசல் வழக்கினை வழக்கறிஞர் மூலம் ஆஜராகி மேல்நடத்தி வருவதாகவும், மேற்படி அசல் வழக்கில் தனது தரப்பில் வாதி தரப்பு சாட்சி.1 ஆன தன்னை குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, வாதி தரப்பு கூடுதல் சாட்சிக்காக 17.03.2025 அன்று கடைசியாக வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், அன்றைய தினத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தனது தரப்பு வழக்கறிஞரை சந்தித்து விபரம் கூற முடியாமல் போய்விட்டது என்றும், இந்நிலையில் மேற்படி 17.03.2025 ம் தேதியில் தனது தரப்பில் கூடுதல் சாட்சியை விசாரணையை தாக்கல் செய்யாததால் தனது தரப்பில் கூடுதல் சாட்சி இல்லை என முடிவு செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுவிட்டது என்றும், இந்நீதிமன்றத்தில் 17.03.2025 ம் தேதியில் தனது தரப்பில் கூடுதல் சாட்சியை விசாரணையை தாக்கல் செய்யாதது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், அது தெய்வாதீனமானது என்றும், ஆகையால் இவ்வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் கூடுதல் சாட்சியை விசாரணை செய்வதற்காக வேண்டி அசல் வழக்கை மறுதிறவு செய்து உத்தரவிடக் கோரி இம்மனு மனுதாரர்/வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.02 17:01:56 +0530

**2. 7ம் எதிர்மனுதாரர்/7ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யதுள்ளதாகவும், 17.03.2025 தேதியில் மனுதாரர் தரப்பில் மேல்சாட்சியை விசாரணை செய்ய வாய்தா ஏற்பட்டிருந்ததாகவும், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வழக்கறிஞரை சந்தித்து விபரம் கூற முடியவில்லை என்றும், எனவே மனுதாரர் தரப்பை இந்நீதிமன்றம் 17.03.2025 தேதியில் முடித்து உத்தரவிட்டுள்ளது என்றும், மனுதாரர் தனது தரப்பில் கூடுதல் சாட்சியை விசாரணை செய்ய வழக்கை ரீ–ஓப்பன் செய்ய வேண்டும் என கூறியுள்ள விசயங்கள் அனைத்தும் உண்மையில்லை என்றும், இவ்வழக்கில் வா.சா.1 சாட்சியாக 28.02.2024ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, 26.06.2024 தேதியில் கூடுதலாக வா.சா.ஆ.5 ஆவணம் குறியீடு செய்யப்பட்டு, 7ம் மனுதாரர் தரப்பில் 05.12.2024 தேதியில் குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் வழக்கை காலம் கடத்த வேண்டும் எண்ணத்தில் மேல்சாட்சியை விசாரணை செய்யாமல் இருந்துவிட்டு, தற்போது இந்நீதிமன்றம் 17.03.2025 தேதியில் மனுதாரர் தரப்பை முடித்து உத்தரவிட்டுள்ளதை ரீ–ஓப்பன் செய்யக்கோரியுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், மனுதாரர் அபிடவிட்டில் ரீ–ஓப்பன் செய்யக்கோரியும், மனுவில் வா.சா.1 சாட்சியை கூடுதலாக விசாரணை செய்து ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், முரண்பட்ட பரிகாரம் கோரியுள்ள நிலையில், மனுதாரரின் மனுவை இந்நீதிமன்றம் அனுமதிக்கக்கூடியதில்லை என்றும், இம்மனுவை அனுமதித்து உத்தரவிட்டால் வழக்கின் போக்கும் திசைமாற்றம் அடைந்து, 7ம் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடக்கூடியதாக இருக்கிறது என்றும், எனவே இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று 7ம் எதிர்மனுதாரர்/7ம் பிரதிவாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **தீர்வுக்குரிய பிரச்சனை:-**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.02 17:02:09 +0530

4) மனுதாரர்/வாதி தரப்பில் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 7ம் எதிர்மனுதாரர்/7ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், விளம்புகை கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கானது 7ம் பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்/வாதியால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மனுதாரர் தரப்பில் இம்மனுவில் அசல் வழக்கில் தனது தரப்பில் வாதி தரப்பு சாட்சி.1 ஆன தன்னை குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, வாதி தரப்பு கூடுதல் சாட்சிக்காக 17.03.2025 அன்று கடைசியாக வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், அன்றைய தினத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தனது தரப்பு வழக்கறிஞரை சந்தித்து விபரம் கூற முடியாமல் போய்விட்டது என்றும், இந்நிலையில் மேற்படி 17.03.2025ம் தேதியில் தனது தரப்பில் கூடுதல் சாட்சியை விசாரணையை தாக்கல் செய்யாததால் தனது தரப்பில் கூடுதல் சாட்சி இல்லை என முடிவு செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுவிட்டது என்று காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) மேற்படி காரணத்தை நிரூபணம் செய்ய எவ்வித ஆவணங்களும் மனுதாரரால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால் மனுதாரரால் இம்மனுவில் கூறப்படும் காரணம் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

9) இருப்பினும், அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், விளம்புகை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சியம் அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.02 17:02:17 +0530

10) ஆகையால், அசல் வழக்கானது மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் சாட்சிய விசாரணைக்காக மறுதிறவு செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

**11) இறுதியாக**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.02 17:02:23 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-**

– இல்லை –

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.02 17:02:29 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**
I.A.No.05/2025
in
O.S.No.343/2015
**உத்தரவு (Draft / Fair)**

நாள் : 02.08.2025